மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.43/2022</u>

2025ம் ஆண்டு நவம்பர் 11ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகேசன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>11.11.2025 வா.சா.3 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு வாதி சொல்லி தான் தெரியும் என்றால் நான் உள்ளூரில் இருப்பதால் எனக்கே தெரியும் வாதியும் சொன்னார். தாவா சொத்தின் காலை எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாதுதாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பதை பொறுத்து எனக்கு தெரியுமா என்றால் பழனிச்சாமி கவுண்டர் மக்கள் முத்துசாமி மற்றும் சின்னசாமி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டிருந்தது.

2. மேற்படியார்கள் எந்த தேதியில் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் 1974 இல்

பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் பாகப்பிரிவினை செய்து கொண்ட போது ஆதியில் அனைத்து பூமிகளும் விவசாய பூமிகளாக இருந்தது என்றால் மானாவாரி விவசாயம் பூமிகளாக இருந்தது. மழை பெய்தால் தான் விவசாயம் செய்வார்கள் அந்த பூமியில் எனக்கு பங்கோ பாத்தியமோ இல்லை என்றால் இல்லை இரண்டு தோட்டங்கள் தள்ளி எனக்கு பூமிகள் உள்ளது தாவா பூமியின் தென்மேற்கில் கிணறு உள்ளது என்றால் ஆமாம்.

3. அந்த கிணற்றில் இருந்து தாவா பூமிகளுக்கு பாசனம் செய்து வந்தார்கள் என்றால் இல்லை மழை பெய்தால் தான் விவசாயம் செய்தார்கள் பாகப்பிரிவினை ஆவணத்திலேயே தாவா பூமியில் உள்ள கிணற்றிலிருந்து தாவா பூமிகளுக்கு நீர் பாசனம் செய்து கொள்வதை பொருத்து கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் கிணறு பள்ளத்தில் உள்ளது. பூமிகள்மேட்டில் உள்ளது எனக்கு தெரிய தாவா கிணற்றிலிருந்து தாவா பூமிகளுக்கு நீர் பாய்ச்சவில்லை.சாட்சி மீண்டும் பாகப்பிரிவினை ஆவணத்தையும் தான் படித்தபோது கடைசி வாசகத்தில் நீர் பாசன வாய்க்கால் வழித்தடங்கள் எதுவும் இல்லை என்று தான் அந்த பத்திரத்தில் கண்டுள்ளது. 2002 பாககறார் ஆவணத்திலும் அவ்வாறு தான் கண்டுள்ளது பாகக்கறார் ஆவணங்களில் நான் சாட்சியோ தரப்பினரோ கிடையாது என்றால் சரிதான். மேற்படி பாகக்காரர்ஆவணங்களை நான் எப்போது எங்கு வைத்து படித்து பார்த்தேன் என்றால் வாதியிடம் கேட்டு அதை நான் வாங்கி படித்தேன்.

4. மேற்படி பாகக்கறார் ஆவணங்களில் தாவா பூமிகளுக்கு கிணற்று பாசனம் கண்டு எழுதப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது தாவா காலைக்கு வட மேற்கில் பிஏபி வாய்க்கால் மதகு உள்ளது என்றால் மற்ற காலைகளுக்கு செல்வதற்காக உள்ளது இந்த காலைக்கு வருகிறதா என்று எனக்கு தெரியாது அந்த மதகிலிருந்து தாவா பூமியின் மேற்கு கோட்டில் தென்வடல் வாய்க்கால் வருகிறதா என்றால் பூமிக்கு மேல் எந்த வாய்க்காலும் இல்லை. பூமிக்கு அடியில் அந்த மதகிலிருந்து வாய்க்கால் தெற்கே செல்கிறதா என்றால் அது எனக்கு தெரியாது.

5. வாதி எந்த ஆண்டு தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றால், தாவா சொத்தை வீட்டு மனைகளாக பிரித்ததில் 2010 ல் வாதி கிரயம் பெற்றார் குமரன் நகரில் வாதி கிரையம் பெற்ற தாவா சொத்திற்கு எந்த பக்கத்தில் மனை இட தடம் செல்கிறது என்றால் தென்வடல் தார் ரோட்டிற்கு கிழக்கில் செல்கிறது. அந்த மனையிடத் தடம் எந்த திசையில் செல்கிறது என்றால், கிழமேல் தார் ரோட்டிற்கு கிளபுறம் கிழமேலாக செல்கிறது. அந்த தடத்தை பார்த்து வடக்கு பார்த்து வாதி வீடு கட்டியுள்ளார் என்றால் ஆமாம்.

6. அந்தத் தடத்தின் குறுக்கே குழாய் அமைத்து பிஏபி வாய்க்கால் செல்கிறதா என்றால் வாய்க்கால் போட்டால் தடத்தில் யாரும் செல்ல முடியாது என்பதற்காக அந்த இடத்தில் மட்டும் பைப்லைன் அமைத்து வாய்க்கால் தண்ணீர் செல்கிறது.நான் வாதிக்கு உறவினரா என்றால் இல்லை உள்ளூர் நண்பர். வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்களை வாதி

எனக்கு சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.11 18:57:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்